பதிவு எண் — M 5720 வெள்ளிக் கிழமையில் 7 NOV 1954 குலத தாள

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-7 தருதலம், மாம்பாக்கம்; செய. ஐப்பசி, 23—10—54 தளிர்-3

## அறவனே யெனை அஞ்சலென்று அருளாய்!

"குறைவிலா நிறைவே குணக்குன்றே கூத்தனே குழைக்கா துடையானே
உறவிலேன் உனையன்றி மற்றடியேன் ஒருபிழை பொறுத்தா லிழிவுண்டோ
சிறைவண் டார் பொழில் சூழ்திரு வாரூர்ச் செம்பொனே திருவா
வடுதுறையுள்
அறவனேயெனை அஞ்சலென் றருளாய் யாரெனக் குறவமரர்க ளேறே"

(சுந்தரர்)

ஒருவன் கொடையாளியாக இருக்கலாம், படித்தவனாக, சீலம் மிக்க கோயில் பற்றுள்ளவனாக, யோகப் பயிற்சியில் சிறந்தவனாக இருக்கலாம். அவனிடம் நீதியொழுக்கம் இல்லாமற் போனால் அவனுடைய ஏனைய தன்மைகளால் எள்ளளவும் பயனில்லை. நீதி தழைக்கும் இடத்தில் ஏனைய தன்மைகள் யாவும் ஒருங்கே மருவும். அன்றாட வாழ்வில் நீதியாக நடந்து வருவதே மற்றெல்லாவற்றையும் விடச் சிறந்தது.

நீதியுடைய ஒருவரை நினைப்பின் அகத்தில் அவர்தம் நேர்மை உருவம் தோற்றுகிறது. நீதியும் ஒரு உருவின் வாயிலாகவே தன்னை உணர்த்தித் தழைக்கும். காதல், வீரம், அறிவு, அழகு இறைக் கூறுகளாகப் பொலிவதுபோலவே நீதியும் பொலிவதாம். "இன்னவுரு இன்ன நிறம் என்றறிவ தேலரிது நீதிபலவும், தன்ன வுருவாமென மிகுத்தவன்" என்பது வெம்பந்தம் நீக்கும் சம்பந்தப் பெருமான் வாக்கு.

வன்றொண்டர் இறைவனைத் தோழராகப் பெற்றவர். தோழரின் விருப்பங்களை அட்டியின்றி நிறைவேற்றி வைப்பதில் இறைவனுக்குத்தான் ஆ! எவ்வளவு மகிழ்ச்சி. இருப்பினும் திருவொற்றியூரில் உறுதி மொழியினின்று வழுக்கிய வன்றொண்டர்பால் இறையன்பு என்ன செய்தது? அது நீதியாய்க் கண்களைக் கைப்பற்றியது. அன்று தொட்டு வன்றொண்டர் தம் தோழர் நீதியாயிருக்கின்றார் என்பதனை அடிக்கடி குறிப்பிடுகிறார்.

நீதியொழுக்கத்தை அறிவுறுத்திச் சிறந்தவர்களில் தலையாயவர் விருஷப தேவரும் புத்தரும் ஆவர். அவர்களின் உருவங்களை நெஞ்சார நினைந்து நீதிவழித் தலைப்பட்டு மன்பதைப் பணி செய்தல் நம்மனோர் கடன் அல்லவா!

'மூர்த்தி'

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |

ஆயுள்—

கையொப்பம் ரூ. 100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | செய, ஐப்பசி, | தளிர் |
|---|---|---|
| 7 | 22-10-54 வெள்ளி. | 3 |


# சோவியத் கல்வி முறை

தேசம்! இதுதான் ரஷ்யரின் பாசம்! அதற்கேற்ற கல்விமுறை தான் அங்கு நடக்கிறது. தேசம் முழுவதும் ஒரே யந்திரம்; தேச மக்கள் அனைவரும் அதன் உறுப்புகள். ஆணி முதல் மின்சாரம் வரையில் எல்லாம் யந்திரமே. ஆண் பெண் அடங்கலும் தேச யந்திரத்தின் பாகங்களே. ஒவ்வொரு பாகத்தையும் நன்ருகக் கூருக்கி அமைத்துப் பொதுவுடைமை யந்திரத்தை வேகமாக நடத்தவே பள்ளிக்கூடங்கள் அமைக்கப் பட்டுள்ளன. கம்யூனிஸம் அல்லது சமதர்மத்தின் ஆணிவேரும் பக்க வேரும் பள்ளிக்கூடங்களே.

## ஆணும் பெண்ணும்:

ரஷ்யாவில் ஆண் பெண் வேற்றுமை உறுப்புக்களில் உண்டு; உடையில் உண்டு. ஆனல் நடையிலில்லை. பொதுவாழ்வில் இல்லவேயில்லை இருபாலரும் சேர்ந்தே கற்கிருர்கள் பள்ளிக் கூடங்களில் 99 சதவிகிதம் கலப்புக் கல்வி தருவனவே. இரண்டொரு தனிப் பள்ளிகள் மாஸ்கோவில் உண்டு. ஆணும் பெண்ணும் ஒன்ருய்க் கற்கவே விரும்புகிருர்கள். இருவரும் ஒன்ருக நடப்பர், படிப்பர், ஆடுவர், பாடுவர்; பொதுவாழ்விலும் இருவரும் சரிநிகர் சமானமே.

## கட்டாயக் கல்வி:

ஒவ்வொருவருக்கும் கற்க உரிமை உண்டு. (சோவியத் சட்டம் 121) கற்றே தீர வேண்டும்! கலாசாலைகள் எல்லாம் குடியரசின் சொந்தமே. பொதுவுடைமைக் கொள்கைப் படியே அங்கே கல்வி முறை வகுக்கப் படும். அதையே எல்லாரும் பயிலவேண்டும். இந்தக் கல்வி முறை மனித சக்தியையும் விஞ்ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்டது. கடவுளைப்பற்றியோ ஆத்ம ஞானத்தைப் பற்றியோ அவர்களுக்குக் கவலை இல்லை. பைபிள் வாடையோ பள்ளிக் கூடத்திலில்லை.

## படிப்பும் தொழிலும்:

நல்ல உடல் வலிமை; காலத்தை வெல்லும் கலையறிவு; பொருளாதாரப் பெருக்கத்திற்கு ஏற்ற [illegible] தொழிலறிவு; மனக் களிப்பிறகேற்ற ஆடல் பாடல்; நாட்டின் தேவைக்கேற்ற தயாரிப்பு; இவையே கல்விப் பயிற்சியாகும். வீடுகட்ட இத்தனைச் சட்டம் வேண்டுமென்ருல் அதோ மாவாடியில் எடுக்கிருேம். அதுபோல நாடமைக்க இத்தனை எஞ்சினீயர்கள், இத்தனை டாக்டர்கள், இத்தனை கலைவாணர்கள், இத்தனை சிற்பிகள் வேண்டும் என்ருல் அதோ கல்லூரியில் கிடைக்கும். ரஷ்யாவில் வேலையில்லாத் திண்டாட்டமே கிடையாது சகுதிச் சீட்டைத் தூக்கிக் கொண்டு தகாத இடத்தில் எல்லாம் நுழைந்து சிறுமைப் படத் தேவையில்லை. ரஷ்யாவில் அந்நியருக்கு வேலையில்லை

## கல்வியின் வளர்ச்சி:

1897-ம் ஆண்டு ரஷ்யாவில் 20 சதம் பேர் படித்தவர்; ஆர்டிக் பிரதேசங்களிலும் தெற்கே உஸ்பெகிஸ்தான், கர்ஜாக், கிர்ஜிக், நுர்க்மான் பிரதேசங்களிலும் ஒரு சதவிகிதம் கூடக் கற்றவ ரில்லை 1914-ம் ஆண்டு 40-கற்றவர்; பின்பு சொன்ன இடங்களில் கல்வியொளி புகவேயில்லை. 1917 அக்டோபர் புரட்சிக்குப் பிறகு நிலைமை முற்றிலும் மாறி விட்டது. லெனின் போட்ட முதல் கட்டளை ஆண் பெண் அடங்கலும் காலத்திற்கேற்ற கல்வி பயிலவேண்டும் என்பதே. புரட்சிக்குப் பிறகு பொருளாதார நிலைமை மோசமாயிருந்தது.


Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவைப் பகைத்துப் பொருள் முற்றுகைப் போட்டுத் தொல்லை செய்தன. எல்லா இடங்களையும் சமாளித்துக் கொண்டு சோவியத் ரஷ்யா கலையும் தொழிலும் வளர்த்து முன்னேறியதற்கு லெனின் வகுத்த திட்டங்களை ஜனங்கள் மனமொத்து நிறைவேற்றினர்.

முதியோர் கல்வி:

கல்வி எல்லோருக்கும் பொது. ஆண் பெண் அனைவருக்கும் நாட்டின் தேவைக் கேற்ற கல்வியும் கைத்தொழிலும் முறையாகப் பயின்றே தீர வேண்டும் என்று ஐந்தாண்டுத் திட்டம் போட்டார் லெனின்; அதன்படி ஏராளமான பள்ளிக்கூடங்கள் திறக்கப்பெற்றன. ஆசிரியர் பயிற்சி விரைவாக நடந்தது. முதியோர் கல்வித் திட்டம் நிறைவேறியது. பகலில் உழைப்பவர் இரவில் கற்றனர். படித்தவர் படிக்காதவருக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்தனர். நூலகங்களும் படிப்பகங்களும் எழுந்தன. பிற நாட்டிலக்கியங்கள் எல்லாம் ரஷ்ய பாஷையில் மொழி பெயர்க்கப் பட்டது. ரஷ்ய மொழி அறிவுக் களஞ்சியமானது. இன்று ரஷ்யாவின் பொது மொழி ரஷ்யா பாஷை. இதை எல்லாரும் அறிவார்கள்.

நான் டாஷ்கண்டில் சில கிராமங்களுக்குச் சென்றேன். திடீரென வழியில் ஒரு கூட்டுப் பண்ணையுள் புகுந்தேன். அங்கிருந்த ஒருவருக்குப் பிரெஞ்சு தெரிந்திருந்தது. அவருடன் அளவளாவினேன். அவர் என் பாட்டியைப் பாருங்கள் என்று அழைத்துச் சென்றார். நான் ஆவலாகச் சென்றேன். பழுத்த பழம் 110 வயதுக் கிழவி; அவளைச் சுற்றி நாற்பது குழந்தைகள் உட்கார்ந்திருந்தன. அவள் டால்ஸ்டாயின் அன்னா கரீனாவைப் படித்து அந்தக் குழந்தைகளுக்குக் கதை சொன்னாள். அவள் அன்புடன் வரவேற்று முதலில் சாப்பிடுங்கள் என்று ஒரு பெரிய ரொட்டியையும் ஒரு செம்பு பாலையும் என் முன் வைத்தாள். நான் நன்றி கூறிப் பேசினேன்.

நான்:— பாட்டி, பள்ளிக்கூடமா நடத்துகிறீர்கள்? இவரெல்லாம் யார்?

பாட்டி: எல்லாரும் என் பேரப் பிள்ளைகள். எனக்கு ஏழு பிள்ளைகள்; அவர்கள் குழந்தைகளே இவர்கள். என் மூத்த நாட்டுப் பெண் வீரத் தாய். அவளுக்குப் பத்துக்குழந்தைகள். அவள் பேத்தி பேரன்மார் இவர்கள். இவர்களுக் கெல்லாம் தினம் நான் படித்த கதைகளைச் சொல்லுவேன்.

நான்: பாட்டியம்மா, "கண்ணாடி யில்லாமலா படிக்கிறீர்கள்? எங்கே படித்தீர்கள்? உங்கள் கதையைச் சொல்லுங்கள்.

பாட்டி: சந்தோஷமாகச் சொல்கிறேன். என் சிறுவயதில் படாத பாடு பட்டேன். ஒரு ஹோட்டலில் பாத்திரம் கழுவிப் பிழைத்தேன். அப்போதெல்லாம் எங்களுக்குப் படிப்பே கிடையாது; பள்ளிக்கூடமும் கிடையாது. பெண்கள் கோஷா; வீட்டை விட்டு வெளி வர முடியாது. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்பர். ஆண்கள் ஐந்தாறு பெண்களை மணஞ் செய்வர். நரகவேதனை தான். 1918-ம் வருஷம் இங்கே புரட்சி நடந்தது. எங்களுக்கும் நல்ல காலம் வந்தது. கோஷாவைத் தூக்கி எறிந்தோம், கல்வி கற்றோம். இப்போது எனக்கு எழுபதுக்கு மேல் வயதானது. என் நாட்டுப் பெண் நன்றாகப் படித்தாள். இங்கே இராப் பள்ளிக்கூடம் வைத்தாள். அதில் நானும் படித்தேன். என்னுடன் இந்தப் பண்ணைக் கிழவிகளும் படித்தனர். நாங்கள் இப்போது எடுத்த புத்தகம் படிக்கிறோம். உலகை அறிகிறோம். எல்லாம் அந்த லெனின் செய்த உபகாரம்.

இந்த மாதிரி ரஷ்யாவில் வீட்டுக்கு வீடு பள்ளிக்கூடம் வைத்து மடமையிருளை மாற்றி அறிவொளி பரப்பினர்.

—'தி. சுடர்'

(வரும்)

**Phone 55034 Tel. Enkayam**

**கைத்தறி ஆடைகளில்**

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

**பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்

53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# கவிமணி

வித்துவான் மு. சண்முகம்பிள்ளை
(தினமணிச் சுடர்)

### அன்னை அடிசார்ந்த மாமணி

உலகில் எட்டு திக்கும் ஒளி வீசிய கவிமாமணி மறைந்து விட்டது.

முதுபெரும் தமிழ்க் கவிஞர் நம்மிடையே நின்று மறைந்து விட்டார். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை யவர்களுக்கு 79 வயது பிறந்து இன்னும் மூன்று மாதம் பூர்த்தியாகவில்லை. இறைவனது அருட்பெருஞ் சோதியில் கலந்து விட்டார். உள்ளம் தெளிந்த பெருஞானி; கள்ளங்கபடமற்ற கருணையுள்ளம் வாய்த்தவர். எள்ளத்தனையும் மரண பயமின்றி இருந்தவர்.

*உள்ள நுரை வேண்டுமெனில்*
*உள்ளம் தெளிய வேண்டுமப்பா*
*கள்ளங் கபடாகாதப்பா!*
*கருணை பெருக வேண்டுமப்பா!*
*அள்ளி உண்ணும் உணவுக்காய்*
*அருமை கெடலாகாதப்பா!*
*எள்ளத் தனையும் மரண பயம்*
*இல்லாதிருக்க வேண்டுமப்பா!*

என்று போதனை செய்யும் கவிமணியின் வாழ்க்கையே இதற்கு இலக்கியமாய் அமைந்து விளங்கியது.

'எப்படியேனும் தேகத்தை உறுதி செய்து கொள்ளவேண்டும். நமது காரியம் முடிந்த பிறகுதான் சாவோம்; அதுவரை நாம் சாகமாட்டோம். நம் இச்சைகள், நம்முடைய தர்மங்கள் நிறைவேறும்வரை நமக்கு மரணமில்லை' (தத்துவம் பக் 49) என்று அமரகவி பாரதியார் ஓரிடத்தில் எழுதுகிறார். அவ்வாறே கவிமணியும் தாம் வந்த காரியம் முடிந்துவிட்டது; இனி நாம் இறைவனிடம் செல்ல வேண்டுவதுதான் என்று தமது உற்றார், உறவினர், நண்பர்களிடமெல்லாம் சில காலமாகவே சொல்லிக்கொண் டிருந்தார்கள். அதுமட்டுமா?

*என்றுவருவான் எமனென்றெதிர் நோக்கி*
*நின்று தளர்கின்றேன் நித்தமுமே —மன்றில்*
*நடங்கண்ட ஈசன் நடராசன் பாதத்து*
*இடங்கண்டு வைநீ எனக்கு.*

எனத் தமது நண்பர் மறைந்த போது பாடிய இரங்கற் பாடலிலே குறிப்பிட்டும் உள்ளார்கள். நவராத்திரி விழாவின் முதல் நாளிலே தமது அருமைப் புதல்வனை அன்னை அழைத்துக் கொண்டாள்.

### தோற்றம்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் அவதரிக்கும் பாக்கியத்தைப் பெற்றது குமரித் தெய்வம் நித்தம் தவம் செய்யும் தென்குமரி எல்லை. சுசீந்திரம் என்னும் சிவத் திருப்பதிக்கு வடக்கே சுமார் ஒரு மைல் தூரத்தில் அமைந்த தேரூர் கிராமத்தில் பிறந்தார். கொல்லம் வருடம் 1050 (1876) அதாவது தாது வருடம் ஆடி மாதம் 14-ம் நாள் ஆயில்ய நட்சத்திரத்தில் தமிழுலகு வாழ வந்து தோன்றினார்.

இவரது தந்தை கணக்கு சிவதாணு பிள்ளை; மூத்த பிள்ளை என்னும் சிறப்புப் பெயர் கொண்டவர். தாய்மொழியாகிய தமிழரோடு ஆங்கிலமும் பயின்ற அறிஞர்; உப்புப் பண்டக சாலையில் அரசாங்க அலுவல் பார்த்தார். இவரது தாயார் ஆதிலட்சுமி அம்மையார் தமிழ்ப் புலமை நிரம்பிய குடும்பத்தில் பிறந்தவர். இவ்வம்மையாரின் தந்தை மாணிக்கவாசகம் பிள்ளை ஒருகவிஞர் இவ்வம்வம்மையாரின் சகோதரர் கண்ணுப்பிள்ளை சிறந்த ஒரு பௌராணிகர். இங்ஙனம் கல்வி வளம் பூத்த தமிழ்க் குடியில் மலர்ந்தார் நமது கவிமணி.

### இளமைக் கல்வி

பெற்றோர்களுக்குக் கவிமணியிடத்தில் மிகுந்த அன்பு அவர்களுக்கு ஆண் குழந்தை இவர் ஒருவரேதான். குழந்தையைச் செல்வமாய்ப் போற்றி வளர்த்தனர் பெற்றோர். ஆரம்பக் கல்வியைத் தாம் பிறந்த தேரூரிலேயே பெற்றார். பின்னர் நாகர் கோவிலின் ஒரு பகுதியாக இப்போது அமைந்திருக்கும் கோட்டாற்றிலுள்ள அரசாங்க ஆங்கிலப் பாடசாலையில் கல்வி பயின்றார்.

### அன்னையின் ஆதரவு

தமது பத்தாவது வயதில் தந்தையை இழந்தார். அன்னையார் மைந்தரின் படிப்புக்கு உறுதுணையாயிருந்து ஊக்கினார்கள். மெட்ரிகுலேஷன் பரீட்சையில் வெற்றி பெற்றார். கல்லூரியில் எப். ஏ. வாசிக்கும்போது சில அசந்தர்ப்பங்களால் படிப்பை இடையில் நிறுத்திவிட நேர்ந்தது. அதன்பின் போதனாமுறைப் பயிற்சி பெற்று ஆசிரியராகும் தகுதி பெற்றார்.

### தமிழ்ப் புலமை

தமிழ்க் கல்வி பள்ளிப்படிப்பினால் பெருகவில்லை. அந் நாளில் அங்குள்ள பள்ளிகளில் தமிழ் கற்பிப்பதே இல்லை. ஆட்சி மொழியான மலையாளமும் ஆங்

கிலமும் தான் கற்க வசதியுண்டு. கவிமணியும் கல்லூரியில் கற்றது மலையாளமும் ஆங்கிலமும் தான். ஆனால் தாய்மொழியில் இயற்கையாகவே அவருக்கு ஈடுபாடு மிகுதியும் இருந்தது. தேரூரைச் சார்ந்த வாணன் திட்டில் திருவாவடுதுறை மடம் ஒன்று உண்டு. அங்கே சாந்த லிங்கத் தம்பிரான் என்பவர் அப்பொழுது கட்டளைத் தம்பிரானாக இருந்தார். இவர் தமிழ்ப் புலமை மிக்கவர் இவரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களில் முறையாகப் பயிற்சி பெற்றார் கவிமணி. கலாசாலையில் படிக்கும் காலத்தும் தமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் தம்பிரானையடுத்துத் தமிழ்க் கல்வியைப் பெருக்கினார். இவருக்குப் பின் கட்டளைத் தம்பிரானாக வாணன் திட்டு மடத்திற்கு வந்த சங்கரலிங்கத் தம்பிரானிடமும் இவர் தமிழ்க் கல்வி பயின்றதுண்டு.

## கவிதை வரவு

கவிபாடும் வன்மை இயற்கையாகவே இளமையில் இவருக்கு உண்டானது. இவர் ஓர் பிறவிக் கவிஞர். பள்ளியில் படிக்கும் காலத்து இவர் விளையாட்டாக வரைந்த கவிதைகளும் பல. இளமையில் கவிமணி பாடிய பாடல்கள் பல இன்று பெற முடியாமற் போயிற்று. தமது தமிழாசிரிய தம்பிரானின் கட்டளைப் படித்தேரூரில் கோயில் கொண்ட அழகம்மன் மீது ஆசிரிய விருத்தங்கள் பாடினார். இவ்விருத்தங்கள் தாயுமானவர் பாடல் போக்கில் அமைந்து இன்பம் பயக்கின்றன. இதுவே இன்று கிடைக்கும் கவிதைகளில் முதற் கவிதை.

## தெய்வ பக்தி

இது முதலாகத் தெய்வத்தைப் பொருளாகக் கொண்ட கவிதைகளே மிகுதியாகப் பாடினார். தெய்வ பக்தியில் அவரது உள்ளம் ஊன்றியது. திருநெல்வேலி உமையொருபாகக் குருக்களிடம் சிவ தீட்சை பெற்றுக் கொண்டார்.

## திருமணமும் உத்தியோகமும்

1901-ம் வருஷத்தில் கவிமணி புத்தேரியில் பிறந்த உமையம்மையார் என்னும் பெண்கள் நாயகத்தை திருமணம் செய்து கொண்டார். அந்த ஆண்டிலேயே திருவிதாங்கூர் அரசாங்கக் கல்வி இலாகாவில் ஆசிரியராக உத்தியோகத் துறையில் புகுந்தார். முதலில் ஆரப்பப் பாடசாலை ஆசிரியாகச் சென்றார். இவரது தகுதியறிந்த அதிகாரிகள் படிப்படியாய் உத்தியோக உயர்வு தந்தனர். பெண்கள் போதனா முறைக் கல்லூரியிலும், பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் சிற்சில ஆண்டுகள் வேலை பார்த்தனர். பின்னர் இவரது தமிழ்ப் புலமை கண்டு திருவனந்தபுரம் மகாராஜா பெண்கள் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக நியமித்தனர். இந்த வேலையிலிருந்து 1931 ம் ஆண்டு ஓய்வு பெற்றார். முப்பது வருஷகாலம் ஆசிரியத் தொழிலில் அவர் உழைத்துள்ளார். சிறந்த போதகாசிரியராய் மாணவருலகிற்கு நற் பணி புரிந்தார்.

## தொண்டு

கவிதைகளைக் கற்று அனுபவிப்பதில் அவர்களுக்குப் பிரியம் அதிகம். தமிழில் உள்ள புராதன கவிதைகள் முதலாக தற்காலப் பாடல்கள் வரையில் கற்றுணர்ந்தார். இதுபோலவே ஆங்கிலக் கவிதைகளையும் கற்று அனுபவித்தார். தென்னிந்திய சரித்திரத்திலும் சிலாசாசன ஆராய்ச்சியிலும் அவருக்குத் தனிப்பட்ட பிரியமும் உண்டு. சரித்திர சம்பந்தமாகவும் சாசனம் சம்பந்தமாகவும் பல புதுப் புதுச் செய்திகளை ஆராய்ந்து அறிவித்துள்ளார்கள். சரித உலகிற்கும் தமிழ்க் கவிதை உலகிற்கும் அவர் செய்திருக்கும் தொண்டுகள் அளவிடற்கு அரியன. ஆசிரியராக இருந்தகாலத்தில் குழந்தைகளுக்கேற்ற எளிய பாடல்களையும் பாடி வந்தனர். ஆங்கிலப் பாடல்களை மொழி பெயர்த்தும் பல பாடல்கள் பாடினர். கவிமணியின் மொழி பெயர்ப்புப் பாடல்கள் தமிழில் புதியதொரு நூதன சிருஷ்டியாக அமைந்துள்ளன. படிக்கும் போது மொழி பெயர்ப்பு என்ற உணர்ச்சியே தோன்றாது.

## ஓய்வு

ஓய்வு பெற்ற பின் கவிமணி தமது மனைவியின் ஊராகிய புத்தேரியில் வசித்து வந்தார். கவிதைகள், கீர்த்தனங்கள் இயற்றல், தமிழ் நூல்கள் ஆங்கில நூல்களைப் படித்து அனுபவித்தல், சிலாசாசன ஆராய்ச்சி ஆகியவற்றில் தமது பொழுதை செலவிட்டு வந்தனர். இங்ஙனம் சுமார் பதினைந்து ஆண்டுகள் இன்பகரமாகக் கழிந்தன. திருவிதாங்கூர் பல்கலைக் கழகம் தோன்றியது முதல் அதன் தமிழ்ப் பகுதியில், கவிமணி பெரும் பங்கு கொண்டு உழைத்து வந்தார். சில ஆண்டுகளுக்கு முன் அண்ணாமலை சர்வகலாசாலையார் தமது கலாசாலையின் கௌரவத் தமிழ்ப் பேராசிரியாக இருக்க விரும்பி அழைத்தனர். கவிமணி தமது

முதுமையும் நோயும் காரணமாக அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

உடல் நோய்

சுமார் ஏழெட்டு ஆண்டு களுக்கு முன்பாகவே அவர் நோய்வாய்ப்பட்டார். எக்ஸிமா, ஆஸ்த்மா, வியாதிகளால் அவர் பட்ட துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல; அத்தனையும் ஆண்ட வன் கருணையாக எண்ணி அநுப வித்தார்.

உன்னிடத்தி லன்றி
உலகில் எவரிடம்போய்
என்னுடைய சங்கடத்தை
யானுரைப்பேன்-பன்னிருகை
ஏந்து மெழில் செந்தில்
இறைவா உனையன்றி
ஆர்துணை வேறுண்டோ ஐயா!
பண்டிதரும் கைவிட்டார்
பைத்தியமும் தீர்ந்த நயான்
உண்ட மருந்தால் குணமோ
ஒன்றுமில்லை—அண்டர்
அமராவதி காத்த
அண்ணலே! செந்தில்
குமரா எனையாண்டுகொள்.

இப்பாடல்கள் நோயில் மலர்ந் தவை அவர் நோயால் பட்ட பாடுகள் இப் பாடல்களால் நன்கு வெளிப்படுகிறது.

சத்திர சிகிச்சை

இதனிடையில் 1952-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் சிறுநீர் தடைப்பட்டது. அதனால் விளைந்த துன்பம் மிகப் பெரிதாயிற்று. வைத்தியரது ஆலோசனைப்படி சத்திர சிகிச்சை பெற்றுக் கொண்டார் அது முதல் படுக்கையிலேயே கிடக்கவேண்டியவரானர். சிறு நீர் குழாய் மூலம் வேறு வழி யாக வந்துகொண் டிருந்தது. இதனல் அவர்கள் நீண்டகாலம் உயிர் வாழ முடியாது என்பது வைத்திய நிபுணர்கள் அன்றே சொன்னர்கள். படுத்திருந்தாலும் எப்பொழுதும் போலவே ஆகா ரம் உட்கொண்டு வந்தார். தம திடத்திற்கு வரும் அன்பர்க ளோடு உரையாடிக்கொண் டிருந் தார். அறிவுத் துறையிலும் படுத்தபடி வேலை செய்து கொண்டுதான் இருந்தார். படுக்கை விட்டு அவசியம் நேர்ந்தபோது பிறருதவி யின்றி தாமே எழுந்து விட்டிற்குள் உலவினர்.

இறுதி நிலை

சுமார் 15 நாட்களாகத்தான் ஆகாரம் திடீரென உட்கொள்ள இயலவில்லை. பேசும் சக்தியும் குறைந்துபோயிற்று. கடைசி யில் சில நாட்கள் ஆரஞ்சு பழ ரசம்கூட அருந்த முடியவில்லை. எந்த நேரத்தில் பிரிவு நேருமோ என்ற நிலையில்கிடந்தார். 27-9-54 பகல் 2-30 மணியளவில் அவர் தம் பூத உடலை நீத்து ஒளியுரு வும் பெற்றார். (நவராத்திரி விழா வின் தொடக்கமாகிய இம் முதல் நாளில் அன்னை தம் அருமை மைந்தனைத் தமது கொலுவில் அழைத்துக் கொண் டாள் போலும்!)

கவிமணிக்குப் பணிபுரியும் பாக்கியம்

கவிமணி யவர்களுடைய மனைவியாரும் வயதான நிலையில் இருக்கிறார்கள். தமது அருமை மனைவியைத் தவிர குழந்தைகள் எதுவும் ஆண்டவன் அவருக்கு அளிக்கவில்லை. குழந்தையில்லாக் குறைபேதும் நோமல் கவிமணி அவர்களைப் பல ஆண்டுகளாகப் பாதுகாத்து வந்தவர் அவரது மருகர் ஸ்ரீ குமாரசாமிப் பிள்ளை ஆவர். இவரும் இவரது மனைவி யாரும் கவிமணிக்கு ஆற்றி வந்த தொண்டு அளப்பரிய தொண்டு. கவிமணி அவர்கள் தமது அன் பின் அறிகுறியாகத் தமது நூல் உரிமைகளைச் சில ஆண்டுகளுக்கு முன்பே மருகர் குமாரசாமிப் பிள்ளைக்கு அளித்துவிட்டார்கள். தமிழ்ச் சான்றோர்க்குப் பணிபுரி யும் பேற்றைப் பெற்ற இம் மரு கர் பெரும் பாக்கியசாலியே.

கவிமணி வடிவம்

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை தெய்வீக ஒளி படைத்த வர். அன்பில் மலர்ந்த உள்ளம்; அருள் ததும்பு கண்கள்; சாந்தி நிலவும் திருமுகம்; நெற்றி நிறைந்த திருநீற்றுப் பூச்சு; தலை யில் வைதிகக் கோலத்திற்கு அறிகுறியாகச் சில மயிர்கள், ஆடம்பரமற்ற எளிமையான தோற்றம். அவர் கோதிலாத குணப்பெருங் குன்று. கள்ளம் கபடற்ற வெள்ளை உள்ளம் படைத்தவர். பிறர்க்குதவும் பெருந்தகை, தமிழ்ப் பண்பாட் டில் நன்கு ஊறியவர்; ஒழுக்கத் தில் சிறந்த விழுப்ப முடையவர். சினம் முதலிய தீக்குணங்கள் அவரிடம் மருந்துக்கும் இல்லை. வள்ளுவர் கூறுகின்றபடி 'குணம்' என்னும் குன்றேறி நின்றார் கவிமணி.

கவிமணி தரிசனம்

கவிமணியைத் தரிசித்தவர்கள் யாவராயினும் அவருடைய குளிர்ந்த பார்வையையும் இனிய பேச்சையும் அநுபவியாம லிருக்க முடியாது. அவரது அறிவுரைகளிலும் அவரது முகச் சாந்தியிலும் ஈடுபடாதவர்கள் இருத்தல் அருமையே. தவ நிறை பேறுபெற்ற முற்றத் துறந்த முனிவராய் அவர் முதுமையில் காட்சியளித்தார் எத்தகையவ ரையும் தமது அன்புரையால் ஆட்கொண்டு அவர்களுக்குத் தக்க வண்ணம் அறிவுரை வழங்கினர். அவர்கள்

கூறும் அறிவுரை என்றும் மறவாது போற்றத்தக்கதாக இருக்கும் தம்மை நாடி வரும் இளம் எழுத்தாளர்களுக்கும் கவிஞர்களுக்கும் ஊக்கமூட்டி உணர்ச்சி பெற்று வாழ வழிகாட்டினார். அவரைப் போன்று எய்ப்பினில் வைப்பாக விளங்கும் பெருந்தகையைக் காணுதல் மிக மிக அருமையே.

## தமிழுலகில் கவிமணி

கவிமணியின் கவிதைகள் பலவும் அவ்வப்போது திருவனந்தபுரத்திலும், தமிழ் நாட்டிலும் உள்ள பல பத்திரிகைகளில் வெளிவந்துகொண்டிருந்தன. பல கவிதைகளை 'ஆண்டான் கவிராயன்' 'ஐயம் பிள்ளை' 'யதார்த்தவாதி' முதலிய புனைப் பெயர்களிலேயே வெளியிட்டு வந்தார்கள். இதனால் அவர்களைத் தமிழுலகம் வெகு நாட்களுக்கு முன்பே அறிந்து கொள்ளவில்லை. அவர்களுடைய கவிதைகளை எல்லாம் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் திரட்டி 'மலரும் மாலையும்' என்ற பெயரில் 1938ல் முதன் முதலாக வெளிவரச் செய்தார்கள். அது முதலாகத் தான் தமிழுலகம் கவிமணியின் பெருமையைக் கண்டறிய முடிந்தது. கவிமணியின் அருமை நண்பர் டி. கே சிதம்பரநாத முதலியார் இவர்களது கவிகளில் ஈடுபட்டு அக் கவிதைகளில் அற்புத நயங்களை எல்லோரும் அறியச் சொல்லி வந்தார்கள். ரஸிகமணி கவிமணியைக் 'கண்ணாரக் காண ஒரு கவிஞர்' என்று தமது வாழ்நாள் முழுவதும் கொண்டாடி வந்தார்.

## கவிதைச் செல்வங்கள்

'மலரும் மாலையும்' வெளி வந்த பின் இவரது கவிதை நூல்கள் ஒன்றன்பின் ஒன்றாக வெளிவரத் தொடங்கின. அடுத்து வந்தது ஆசிய ஜோதி. புத்தரது புனித சரித்திரம் பற்றிய பாமாலை மூன்றாவது பிரசுரம் 'உமார் கய்யாம் பாடல்கள்' பாரசீக கவிஞர் உமார்கய்யாம் பாடிய 'ருபாயத்' பாடல்கள் பலவற்றிற்குக் கவிமணி தந்த தமிழுருவம். பின்னர் 'மருமக்கள்வழி மான்மியம்' என்ற நகைச் சுவை வாய்ந்த பிரகசனக் கவிதை நூல். இது நாஞ்சில் நாட்டு வேளாள சமுதாயத்தைச் சீர்திருத்த எழுந்த சமூக சித்திரம்; 1917-18-ம் ஆண்டுகளில் கவிமணி 'தமிழன்' என்ற பத்திரிகையில் பகுதிபகுதியாக வெளியிட்டார். புத்தக வடிவில் முதலில் வந்தது 1942ல் தான். முதுமையில் மலர்ந்த பாடல்கள்தான் 'தேவியின் கீர்த்தனங்கள்' 1953-ல் வெளிவந்தது. கவிமணி பாடிய பாடல்களில் குழந்தைகளுக்கு ஏற்ற பாடல்கள் எல்லாம் 'குழந்தைச் செல்வம்' என்னும் சிறு கவிதைத் தொகுதியாக இப்பொழுது மலர்ந்துள்ளது.

## ஆராய்ச்சிப் பேருரைகள்

தமிழில் சில காலமாக அவர்கள் எழுதிவந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள், சில மேடைகளில் பேசிய பேச்சுக்கள் முதலியனவெல்லாம் 'கவிமணியின் உரைமணிகள்' என்ற பெயரில் இப்பொழுது வெளியில் வந்துள்ளன. ஆங்கிலத்தில் சாசனம் முதலியன பற்றிய அவர் பல காலங்களில் வெயிட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவுள்ளன. இவைகள் இன்னும் தொகுக்கப் பெறவில்லை. இவற்றுள் ஒன்றாகிய 'காந்தளூர்ச் சாலை' என்ற ஆராய்ச்சியுரையை நூல் வடிவில் 1936-ம் வருடம் கவிமணியே பிரசுரித்துள்ளார்கள்.

## கவிமணி நூல்களின் வெளியீடு

கவிமணியின் நூல்களைப் பதிப்பிடுதற்கெனத் தோன்றி, அவர்களது 'மலரும் மாலை'யைத் தனது முதல் வெளியீடாகக் கொண்டு மலர்ந்தது புதுமைப் பதிப்பகம். 'ஆசிய ஜோதி' 'மருமக்கள் வழி மான்மியம்' என்னும் நூல்களும் பின்னர் இப் பதிப்பகத்தில் வெளி வந்தன. இந் நூல்களையும் தொடர்ந்து இப் பதிப்பகத்தில் வெளியிடச் சில காரணங்களால் இயலவில்லை. ஒன்றிரண்டு ஆண்டுகள் கவிமணி நூல்கள் கிடைத்தற்கரியனவாயுமிருந்தன. இந் நிலையில் கவிமணி நூல்கள் நல்ல முறையில் வெளியிட முன் வந்தனர். சென்னைப் பாரி நிலையத்தார். 1951-ம் வருஷம் முதலாகக் கவிமணி நூல்களையெல்லாம் நல்ல முறையில் பிரசுரித்து வருகிறார்கள். அவர்களது 'மலரும் மாலையும்' இரு பதிப்புக்கள் இந் நிலையத்தின் வழி இப்பொழுது வெளிவந்து விட்டன. கவிமணி நூல்கள் யாவும் தட்டின்றி இப்பொழுது கிடைத்து வருகின்றன

## கவிமணி

கல்வி உலகில் பல துறைகளிலும், சிறந்து விளங்கினார் நமது கவிமணி. இவர்களது பெருமையை உணர்ந்து தமிழகம் பல வகையில் பாராட்டியுள்ளது. தமது வாழ்நாளிலேயே பாராட்டப் பெற்ற பெருமையுடையவர் கவிமணி. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார். இவருக்கு 'கவிமணி' என்னும் பட்டம் தந்து 1940-ல் கௌரவித்தார்கள்.

## பாராட்டுகள்

செட்டி நாட்டு அன்பர்கள் [illegible]ங்குடியில் நகரத்தார் சார்பில் கவிமணிக்குப் பொன்னாடை

போர்த்தினார்கள். செட்டி நாட்டு மன்னர் ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியார் கவிமணி அவர்களைத்தமது இல்லத்திற்கு அழைத்து உபசாரணை செய்தார். அரசர் அப்பொழுது அளித்த பணவெகுமதியைக் கவிமணி ஏற்றுக் கொள்ளாமையால் பின்னர் வெள்ளிப் பாத்திரங்களாக அனுப்பிவைத்தார் திருநெல்வேலி, மதுரை முதலிய பெரு நகரங்களிலுள்ள அன்பர்களும் கவிமணியை அழைத்து உபசரித்துப்போற்றினார்கள். அங்கங்கே அவருக்கு அளித்த உபசாரப் பத்திரங்களும் பலவாகும். திருவாவடுதுறை மகா சன்னிதானம் அம்பலவாண தேசிகர் நாகர் கோவிலுக்கு விஜயம் செய்த போது கவிமணிக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினர். ஸர். ஆர். கே. சண்முகம் செட்டியார் முதலிய கோவை அன்பர்கள் கவிமணி இருக்குமிடம் வந்து பொன்னாடை போர்த்திப் பாராட்டிச் சென்றனர்.

கவிமணியைக் கண்ட பெரியார்கள்

கவிமணி இருக்குமிடம் தேடி வந்து அளவளாவிய அன்பர்கள் பலராவர். ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார். எண்பதாண்டிற்கு மேல் வாழ்ந்த வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், திவான்பகதூர் ஆவுடையப்ப பிள்ளை முதலிய நெல்லை யன்பர்கள் கவிமணி இல்லம் வந்து அளவளாவினர். அபிநவகாள மேகம் அனந்த கிருஷ்ணய்யங்கார், சுவாமி சுத்தானந்த பாரதியார் முதலிய பெருங் கவிஞர்களும் அவர்களது இல்லஞ் சென்று கௌரவித்தார்கள். அரசியல் ஞானியாகிய இராஜகோபாலாச்சாரியார், சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் முதலிய அரசியல் பெருமக்களும் அவரிருக்குமிடம் சென்று கண்டனர். கே. எம். அப்பாஸ், ஏ. கே. செட்டியார், இராஜ அரியரத்தினம் முதலிய பத்திரிகாசிரியர்கள் பலர் அவரைப் பேட்டி கண்டனர். அடையாறு கலாக்ஷேத்திரத் தலைவியார் ருக்மணி தேவியார் என். எஸ். கிருஷ்ணன், டி. கே. எஸ். சகோதரர்கள் முதலிய கலைத்துறை வல்லார்களும் அவரைக் கண்டு அளவளாவி மகிழ்ந்துள்ளனர் கல்கத்தா, இலங்கை, பர்மா, பிஜி முதலிய தூரதேசங்களில் வசிக்கும் தமிழர்களும் அவர்களது கவிதைகளில் ஈடுபட்டுத் தமது அன்பைப் பலவகையில் தெரிவித்துள்ளார்கள். எவ்வகையான வேற்றுமையுமின்றி பல துறைகளில் உழைப்பவர்களும் பாராட்டும் வண்ணம் சிறந்து விளங்கினார் கவிமணி.

வானொலியில் கவிமணி

கவிமணி வானொலி நிலையம் சென்று பேசியதில்லை. எனினும் அவர்கள் குரல் வானொலியில் பதிவாகியுள்ளது. திருச்சி, திருவனந்தபுரம் அகில இந்திய ரேடியோ நிலையத்தார்கள் கவிமணி வாழும் புத்தேரியில் சென்று பேட்டி கண்டு, அவர்களது லட்சியங்களை அவர் வாய்மொழியாகக் கேட்டும், அவரது கவிதையை அவரே பாடக் கேட்டும் ஒலிப்பதிவு செய்து தமிழுலகிற்கு அறிவிக்கும் பெரும் பணியைச் செய்துள்ளனர். இதனால் அவர்கள் மறைந்த நாளிலும் அவர் குரலை நாம் கேட்க முடிந்ததல்லவா?

(வரும்)

## முல்லைக் கொடி

(குருகுலக் கிழமை வெளியீடு)

புதிய ஆண்டு, இக் கலைமகள் விழாவிலிருந்து தொடங்கியது.

7-ம் கிளை

8-10-54 வெள்ளிக் கிழமையிலிருந்து வெளிவருகின்றது.

நேயர்கள், தமது புத்தாண்டுக் கையொப்பத்தைப் புதுப்பித்துக்கொள்வார்களாக.

—கண்காணிப்பாளர்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம், (அஞ்)